www.tamilarangam.net

# தமிழனின் தலை மூவாயிரத்திற்கு கொழும்பில் விற்பனையாகின்றது!

ஈழமக்களின் விடுதலைப் போரை பாதியில் மழுங்கடித்துவிட்டு தமிழர்களுக்கு துரோகம் செய்து பிழைப்பு நடத்தும் ஈ.பி.டி.பி. போன்ற இயக்கங்கள் மீண்டும் தமிழ்நாட்டுக்குள் ஆள்பிடிக்க நுழைந்துள்ளன. ஈழத்தில் உள்ள மக்கள் இவர்களின் துரோகத்தனத்தையும், அட்டூழியங்களையும் நேரில் கண்டறிந்ததால் இவர்களை விரட்டிவிட்டனர். ஆகையால் இவர்கள் இப்போது தமிழகத்தில் உள்ள அகதி முகாம்களுக்கு சென்று, ஆசை வார்த்தைகள் கூறி இளைஞர்களை அழைத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அழைத்துச் செல்லப்படும் இளைஞர்களை கட்டாயப் பயிற்சியில் ஈடுபடுத்தி சிங்கள ராணுவத்திற்கு ஒரு நபருக்கு மாதாந்திரக் கூலியாக ரூபாய் 3000/- வீதம் சிங்கள அரசிடம் ஈ.பி.டி.பி. போன்ற இயக்கங்கள் பெற்றுவருகின்றன. ஈழத்தில் விலை போக இளைஞர்கள் கிடைக்காததால் ஆள் பிடித்து சிங்கள அரசிற்கு விற்கவே இவர்கள் இப்போது வந்துள்ளனர்.

***இவர்கள் அழைத்துச் செல்லும் இளைஞர்களின் பணி என்னவாக இருக்கும்?***

***நாட்டின் விடுதலைக்காக போராடப் போகிறார்களா? அல்லது மக்களின் உரிமைகளை பெற்றுதரப் போகிறார்களா? நிச்சயமாக அப்படி எதுவுமே இருக்காது. சிங்கள ராணுவத்திற்கு துணையாக புலிகளுக்கு எதிராகப் போராடத்தான் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். சரி, அப்படி புலிகளை அழித்துவிட்டால், தமிழர்களின் உரிமைகளை சிங்கள அரசு அங்கீகரித்து விடுமா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை என்ற பதிலே கிடைக்கும்.***

முன்னர் புலிகளை துணையாகக் கொண்டு பிற இயக்கங்களை சிங்கள அரசு அழித்தது. இன்று பிற இயக்கங்களின் துணைகொண்டு புலிகளை அழிக்க முற்படுகிறது. இதற்கு ஆள் பிடித்துக் கொடுக்கும் ஒப்பந்த சேவையை ஈ.பி.டி.பி. போன்ற இயக்கங்கள் செய்து வருகின்றன. துரோகம் செய்ய 14 முதல் 30 வயதுள்ள தமிழர்கள் இவர்களுக்கு தேவைப்படுகின்றனர். தமிழர்களின் துணை கொண்டு தமிழர்களை அழிக்கும் சிங்கள அரசின் சூழ்ச்சிக்கு தயவுசெய்து பலியாக வேண்டாம்.

வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் அல்ல என்று கூறிவரும் சிங்கள அரசுக்கு துணை போகும் இவர்களின் நோக்கம் தமிழ் மக்களின் விடுதலை அல்ல. தங்களின் பண பலத்தை பெருக்கி பதவியில் நீடிக்கவும், சிங்கள அரசுக்கு தங்களின் விசுவாசத்தைக் காட்டவும் இந்த ஆள்பிடிப்பு. இவர்களின் துரோக தனத்தில் சந்திரிகா திருப்திகொள்ளவில்லையாம். அவரை திருப்திபடுத்த மேற்கொண்டும் தமிழ்நாடு முகாம்களில் இருப்பவர்களை முன்னிறுத்தி துரோகதனத்தை தொடர முடிவெடுத்துள்ளனர். இலங்கை தூதரகம் இவற்றிற்கான பண பட்டுவாடாக்களை மேற்கொள்கின்றது. தமிழர்களின்மீது குண்டுகள் பொழிந்தும், உணவுப் பொருட்களை அனுப்பாமல் பட்டினி போட்டும் தமிழர்களை படுகொலை செய்து வரும் சிங்கள அரசுக்கு அடிவருடும் இக்கட்சிகள் உங்களை சந்தித்து சந்திரிகாவின் புகழ்பாடி தமிழர்களுக்கு எதிராக துரோகம் செய்ய, உங்களை ஏமாற்றி பணத்தைக் காண்பித்து அழைத்து செல்ல வந்துள்ளனர். இவர்களின் துரோக தனத்திற்கு துணை போகாமல் சிங்கள அரசுக்கு ஒப்பந்தகாரர்களாக வரும் இவர்களுக்கு தக்க பாடம் புகட்டும்படி கேட்டுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் நாம் தமிழர்களாக தமிழ் ஈழத்தில் வாழ வேண்டுமாயின் இந்த தேவானந்தேக்களின் துரோகக் கும்பல்களை விரட்டியடிக்க வேண்டும்.

இந்தியா தற்பொழுது தேர்தல்களில் கவனம் செலுத்தியிருப்பதை பயன்படுத்தி துரோகிகள் சுலபமாக தங்களின் வேலைகளை மேற்கொள்கின்றனர். எனவே, விழிப்புடன் இருக்கும்படி ஈழமக்களை கேட்டுக் கொள்கின்றோம்.

பிரச்சாரப் பிரிவு

**ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி**
**E.N.D.L.F.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாரிடமிருந்து நாம் விடுதலை கேட்கிறோமோ அதே சிங்கள அரசிடம் சென்று ஆயுதமும், பணமும், பிற உதவிகளையும் பெற்றனர் புலிகள். 1990-ல் கிழக்கு மாகாணத்தில் எங்கள் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ENDLF) இயக்கத்திற்கும் சிங்கள இராணுவத்திற்கும் இடையில் பாரிய யுத்தம் நடைபெற்றது. சிங்கள இராணுவத்திற்கு துணையாகப் புலிகள் வந்தனர். சிங்கள இராணுவத்தாலும், புலிகளாலும் எங்கள் இயக்க இளைஞர்கள் 350 பேர் மட்டக்களப்பில் வைத்துக் கொல்லப்பட்டனர். புலிகளுடன் யுத்தத்தைத் தொடர்ந்தால் இழப்பு இரண்டு பகுதிக்கும்தான். இறுதியில் போராளிகளே போராளிகளுக்கிடையில் சண்டை போட்டுத் தொகையைக் குறைத்துக் கொண்டதாக முடியும் என்பதனால் சண்டையிலிருந்து பின் வாங்கினோம். இந்த யுத்தத்தின் மூலம் பயன் அடைவது சிங்கள அரசு. புலிகளுக்கு வெற்றி மட்டுமே தேவைப்பட்டது. உயிரிழப்பது தமிழ் போராளிகள் என்பதில் எந்தக் கவலையும் இருந்ததில்லை. அன்று நாம் பின்வாங்கியதைப் பலரும் கேலி செய்தனர். இன்று என்ன நடக்கிறது? இராணுவம் வருவதற்கு முன்னரே புலிகள் பின்வாங்கிவிட்டனர்.

எதிரியிடம் (சிங்கள அரசிடம்) கையேந்திய புலிகள் அன்று செய்தது தியாகமா? இல்லை, பச்சைத் துரோகம்! ஆனால் அவர்களால் இதற்குச் சூட்டப்பட்ட பெயர் இராஜ தந்திரம். இவற்றைத்தான் இன்று டக்ளஸ் தேவானந் தேக்களும், ஏனைய இயக்கங்களும் செய்கின்றனர்! வழிகாட்டியது வேறு யாருமல்ல புலிகள்தான். எதிரியான சிங்கள அரசே தமிழ் விடுதலை இயக்கங்களை பணமும் ஆயுதமும் கொடுத்து வளர்க்கிறது. இவர்களே உண்மையான பிரதி நிதிகள் என்றும் அரசே கூறுகிறது. ஓர் சிங்கள அரசு தமிழ் விடுதலை இயக்கங்களுக்கு உதவ முடியுமா? அப்படி உதவினால் அதன் உண்மையான நோக்கம் என்னவாக இருக்கும்? இதைக்கூடவா தமிழ் இயக்கத் தலைவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை விரட்டிய புலிகள் இன்று உலகின் நாற்பத்தி ஏழாவது இராணுவத்தை விரட்ட முடியவில்லையே ஏன்?

உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை இவர்கள் விரட்டவில்லை. அன்றைய இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா நாட்டை விட்டு வெளியேறும்படி பணித்ததன் பேரில்தான் இந்தியப்படை வெளியேறியது. இதுதான் உண்மை. பிரேமதாசா அன்று புலிகளின் நண்பர் என்பதனால் பிரேமதாசா விரட்டினாலும், தாங்கள் விரட்டினாலும் இரண்டும் ஒன்றுதான் என்று எண்ணிவிட்டனர் புலிகள். புலிகளின் தவறான இந்தப் பிரசாரத்தைப் பல தமிழ் மக்களும் நம்பினர். ஏன் பல பத்திரிகைகளும் வீரம் பற்றிப் புகழ்ந்து எழுதினர். இன்று எங்கே சென்று விட்டது அந்தப் புகழ்ச்சி! எல்லாம் வியாபாரத்திற்காகத்தான்.

இன்று மக்கள் அழிந்துகொண்டிருக்கும் நிலையில் இயக்கங்கள் மீது சேறு வாரியிறைத்து ஆதாயம் தேட நாம் முற்படவில்லை. எந்தத் தவறினால் இந்த நிலை எங்கள் மக்களுக்கு ஏற்பட்டதோ அந்தத் தவறுகளை திருத்திக் கொள்ளத்தான் வேண்டுகிறோம்.

அன்று புலிகளின் துணைகொண்டு எங்கள் இயக்கத்தை அழிக்க முயற்சித்த சிங்கள அரசு இன்று ஏனைய தமிழ் இயக்கங்களின் துணை கொண்டு புலிகளை அழிக்க முற்பட்டுள்ளது. புலிகளை அழித்தபின் ஏனைய அடிவருடிகளை அழிக்க வெகுநேரமாகாது. கடந்த காலங்களில் தமிழ் மக்கள் கற்றறிந்த பாடமாகும் இவை!

நவீன ஆயுதம் நிறையவே உண்டு. புலிகளை அழிக்க ஊதியமின்றிச் சேவையாற்ற வாருங்கள் என்று இராணுவத் தளபதி ரோகன் தலுவத்த சிங்கள மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார். புலிகள் அல்ல அழிக்கப்படுவது தமிழ் மக்கள்தான்.

தமிழர்களை அழிக்க சிங்களவர்கள் ஒன்று சேரும்போது ஏன் தமிழ் மக்களைக் காக்க தமிழ் இயக்கங்கள் ஒன்று சேரக்கூடாது? அனைவரும் ஒன்று சேர்ந்தால் உலகின் ஆதரவை மீண்டும் பெற்று போராட்டத்தைப் புதிய கோணத்தில் கொண்டு சென்று எங்கள் மக்களைப் பாதுகாக்க முடியும்.

ஈழப் பிரச்சனையில் இந்தியாவைத் தவிர வேறெந்த நாடும் நேரடியாகத் தலையிட முடியாது. பிரேமதாசாவின் துணையில் இந்தியாவை பகைத்துக்கொண்டவர்கள் புலிகள். உதவி செய்யுங்கள், காப்பாற்றுங்கள் என்று கேட்க அவர்களது மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லை. இந்த வெட்கத்தினால் அழிந்து போவது எங்கள் மக்கள்தான். நீங்கள் திருந்த வேண்டும் என்பதுதான் அவர்களது எதிர்பார்ப்பும். சாதாரண ஊர்வன, பறப்பனவற்றிற்கு உள்ள அறிவுகூட உங்களிடத்து இல்லாமல் போனது தமிழர் துர்ப்பாக்கியமே! இன்னும் காலம் கடந்துவிடவில்லை. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு! இல்லையேல்...???

பிரசாரப் பிரிவு

**ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி**

**E.N.D.L.F.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்